கருவியையுமோ நிறுவவேண்டும். அரிசியைத் தீட்டுவதற்கு மட்டுமே அரவை யந்திரங்கள் பயன்படுத்தப்படவேண்டும். உமிநீக்கும் யந்திரம்—அரவை யந்திரத்திலும் உமிநீக்கும் யந்திரங்களிலும் நெல்லைப் புடைத்தெடுக்கும் கருவி அமைப்புடன் ரப்பர் வளையத்தில் இயங்கும் உமிநீக்கும் யந்திரமும் நெல்லைப் பிரித்தெடுக்கும் இயந்திரமும் நிறுவப்பட வேண்டும். இத்திருத்தச்சட்டம் மாவட்ட வருவாய் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. யந்திரத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து முடிப்பதற்காக 1—9—1970 முதல் மூன்று ஆண்டுக்கால அளவினை உரிமம் வழங்கும் அதிகாரி அதாவது மாவட்ட வழங்கல் அதிகாரி அனுமதிக்கலாம் என்று அவர்களுக்கு 1970 ஆகஸ்ட் திங்களில் தெரிவிக்கப்பட்டது.

MR. CHAIRMAN : Question time is extended.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இப்படி மாற்றியமைப்பதால், மாநில அளவில் கூடுதலாக எவ்வளவு அரிசி கிடைக்கும் என்று ஏதாவது கணக்கிடப்பட்டு, அதற்கான புள்ளிவிவரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நமது நாட்டில் பொதுவாக புழுங்கல் அரிசியைத்தான் விரும்புகின்றார்கள். இந்த ரப்பர் ரோலரை உபயோகிக்கும்போது, வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப் பட்ட ரப்பர் ரோலரை உபயோகிக்கும்போது, நன்கு பாலிஷ் ஏறியது. ஆனால் நமது நாட்டிலேயே உற்பத்தியாகும் ரோலரை உபயோகிக்கும்போது அரிசி சற்று பழுப்பு நிறமாகத்தான் இருக்கின்றது. சத்துள்ளதாக அமைந்தாலும், நிறம் பழுப்பு நிறமாக இருப்பதால், அதை மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. எனவே இதைப் பரிசீலிக்க வல்லுனர்களைக் கேட்டிருக்கின் றோம். இப்போது ஹல்லர் ரோலரை மட்டும் போட்டுக்கொள்ளுகின்றதா அல்லது ரப்பர் ரோலரைப் போட்டுக்கொள்ளுகின்றதா என்பது பரிசீலனையில் இருக்கின்றது. நண்பர் அவர்கள் இதுபற்றிக் கேட்பதற்கு முன்பே, இது விஷயத்தில் அடுத்த மார்ச் திங்கள் வரையில் அவகாசம் கொடுக்கப்பட்டிருக் கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

Cellular Concretes.

* 56 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any survey has been conducted into the requirements of Cellular Concretes by (i) the Private Sector, (ii) the Government and (iii) the Public Sector, per year ; and

(*b*) if so, the details thereof ?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வோர் ஆண்டின் தக்கைக் கல் தேவை குறித்து (i) தனியார் துறை (ii) அரசு, (iii) பொதுத்துறை ஆகியவை ஆய்வு நடத்தியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) 'பெருஞ் சென்னை' முழுவதிலும், அதாவது தக்கைக்கல் தொழிற்சாலை அமைந்துள்ள எண்ணூரைச் சுற்றி 80 கிலோ மீட்டர் தொலைவுள்ள பகுதியில், தக்கைக்கல் தொழிற்சாலைப் பொருள்கள் தாராயமாக எவ்வளவு தேவைப்படுகின்றன என்பதுபற்றி ஆய்வு செய்யும் பணியை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 'இப்கான்' தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தது.

(இ) வாலாயமான சுட்ட செங்கல் வழங்கும் நிலையில் 1971-76 வரையுள்ள கால அளவில் ஆண்டொன்றுக்கு 100 மில்லியன் செங்கற்கள் பற்றுக் குறை ஏற்படும் என்று மதிப்பிடப்படுவதால், 1.4 லட்சம் கனமீட்டர் தக்கைக் கற்கள் உற்பத்தி முழுவதற்கும் தேவையிருக்குமென இந்த 'ஆய்வு' புலப்படுத்துகிறது.

Subscription to Workers Union.

* 57. *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the scheme providing for taking over the responsibility of paying the subscription of the Industrial workers to their union by the management by reducing the subscription amount from their salaries is implemented in our State; and

(*b*) if so, the industries in which this scheme is implemented among the industries run by the Public Sector, Co-operative Sector and Private Sector?